இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. அதாவது வழக்கறிஞர்களின் பிரதிநிதி ஒருவரும், போலீஸ் அதிகாரிகளின் பிரதிநிதி ஒருவரும் அந்த விசாரணைக் குழுவிலே இடம் பெறுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகம் பூராவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு பிரச்சினையாக இது இருப்பதன் காரணத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த விசாரணைக் குழுவை நீக்கிவிடுவது இந்த அரசாங்கத்திற்கு ஒரு சங்கடத்தை ஏற்படுத்தாது என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்....

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இதனை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதைச் சொல்லுங்கள். அதிக நேரம் பிரச்சினையை விளக்கிக்கொண்டே போகக்கூடாது.

திரு. ரா. மார்க்கபந்து; அதே நேரத்தில் அந்த அதிகாரி மாற்றம் செய்யப்பட்டதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அடுத்து சஸ்பென்ட் செய்வது பற்றியும் கருத்துக்கள் சொல்லப்பட்டன. சஸ்பென்ட் செய்வது என்பது ஒரு தண்டனையாக இருக்க முடியாது. சஸ்பென்ட் செய்தால் அது விசாரணைக்குக் குந்தமாக முடியும் என்று சொன்னார்கள். சஸ்பென்ட் செய்வது என்பது விசாரணை செய்யப்படுவதற்காக இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்கு செய்யபடுவதே தவிர வேறல்ல. ஆகவே அந்த கோரிக்கையினை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்தி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்கிற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

கவன ஈர்ப்புகள்

(அ) கும்பகோணம் ராமன் அண்டு ராமன் நிறுவனம் மூடப்பெற்றது குறித்து

திரு. எஸ். ஆர். இராதா; பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கீழ்க்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

''கும்பகோணம் ராமன் அன்ட் ராமன் நிறுவனம் திடீரென மூடப்பட்டு, பல தொழிலாளர்கள் வேலை இழந்து, அதனால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து''

1979 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே. கும்பகோணம் பிடாரிக்குளம் தெருவிலுள்ள திருவாளர்கள் ராமன் அண்டு ராமன் (பி) லிமிடெட் நிறுவனம் சுமார் 100 தொழிலாளர்களை கொண்டது. இதில் பெரும்பாலும் பெட்ரோலால் இயங்கும் மோட்டார் வாகனங்களைப் பழுது பார்த்தும் சர்வீஸ் செய்தும் வந்தனர். தொழிலாளர்களிடையேயும் திருவாளர்கள் ராமன் அன்ட் ராமன் மற்றும அவர்களுடைய சக நிறுவனங்களின் (Sister Concerns) நிர்வாகத்திடையேயும் 1977-78க்கான பூரிப்பு ஊதியம் கொடுப்பது குறித்து ஒரு தொழில் தகராறு எழுந்தது. இதன் விளைவாக 25-10-78 முதல் நிர்வாகம் கதவடைப்பு செய்தது. இணை ஆணையர் தொழிலாளர் நலத்துறை, சென்னை நடத்திய சமசர பேச்சு வார்த்தைகளின் பயனாக 28-10-78 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. நிர்வாகம் 31-10-78 முதல் கதவடைப்பை நீக்கியது. கதவடைப்பை நீக்குமுன் தொழிலில் கடந்த 3 ஆண்டுகளாக ஏற்பட்ட பெருத்த நஷ்டத்தினாலும் நஷ்டம் மேலும் தொடர்ந்து ஏற்படுவதாலும் 1—1-79 முதல் கும்பகோணம் பிடாரிக்குளத்திலுள்ள தங்கள் மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் பட்டறையை மூடுவதாக தீர்மானித்துள்ளதாக தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவின் 25 FFAன் கீழ் 27-10-78 அன்று ஒரு அறிவிப்பை செய்திருந்தனர். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இப்பட்டறையை 1-1-79 முதல் மூடுவதால் 45 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதாக 31-12-78 அன்று ஒரு அறிவிப்பு செய்தனர். 1-1-79 முதல் இப்பட்டறை மூடப்பட்டுள்ளது. 27-11-78 அன்று நான் கும்பகோணம் சென்றிருந்த போதும் தொடர்ந்து சென்னையில் 5-12-78 மற்றும் 28-1-79 நாட்களில் இந்நிறுவனத்தில் நிர்வாக இயக்குநரிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். பட்டறையை விரைவில் திறந்து தொழிலாளர்களின் அல்லலைப் போக்க வேண்டியதின் அவசியத்தை அவரிடம் வலியுறுத்தினேன். அவரும் நிர்வாகத்தில் இதர இயக்குநர்களிடம் இந்நிறுவனத்தில் அக்கறையுள்ள அவரது குடும்பத்தாரிடமும் கலந்து ஆலோசித்து இந்நிறுவனத்தை சிறிய அளவிலாவது மறுபடியும் துவக்க முடியுமா என எனக்கு தெரிவிப்பதாகக் கூறினார், அவர் இறுதியாக தன்னுடைய 10-3-79 நாளிட்ட கடிதத்தில். இத் தொழில் ஏற்பட்ட பெருத்த நஷ்டத்தாலும், சமீபத்திய பெட்ரோல் மற்றும் கார் விலை உயர்வினாலும், இந்நிறுவனத்தை மூடுவதை தவிர்க்க முடியாது, என கூறியுள்ளார்.

இதற்கிடையில் இப்பட்டறையை மூடினது குறித்து தொழிலாளர்கள் தஞ்சாவூர் தொழிலாளர் நல அலுவலர் முன்பு தொழில் தகராறு எழுப்பினர். இத்தகராறை சுமுகமாக தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

[முற்பகல் 11-30]

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலகம் மூடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கூறும் நேரத்தில்-பெட்ரோல் விலையேற்றம், கார்களின் விலையேற்றம் இவைகள் காரணமாகத் தான் மூடிவிட்டதாக இதன் உரிமையாளர் தெரிவிப்பதாக சொன்னார்கள். பெட்ரோல் விலை இப்பொது தான் ஏறியிருக்கிறது. அதற்கு முன்னாலேயே இந்தத் தொழிலகத்தை மூடுவதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் பேரை வைத்துக்கொண்டு-அவரிடமிருந்து நூற்றுக்கனக்கான பேருந்துகளை அரசுடமையாக்கப்பட்டதின் காரணமாகத்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சுருக்கமாக கேள்வியாக கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: சுருக்கமாகத்தான் கேட்கிறேன். கேட்பதை விளக்கமாக சொல்லவேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதை சுருக்கமாக சொல்லுங்கள். விளக்கமாக பேசிக்கொண்டிருக்க முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா: சுருக்கமாகத்தான் கேட்கிறேன். இப்போது மூடப்பட்டிருக்கின்ற தொழிலகத்திலுள்ள தொழிலாளர்களை சோழன் போக்குவரத்துக் கழகத்தில் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, சமரச பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. Let us watch the progress with patience. இதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. எஸ். ஆர். இராதா; சமரச பேச்சுவார்த்தை நடப்பதாக சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்தத் தொழிலகத்தில் முன்பு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அங்கிருந்த போலீஸ் வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று அந்த செட்டில்மென்டில் சொல்லப்பட்டிருந்தது. அது இன்னும் வாபஸ் பெறப்படவில்லை. ஆகவே அரசே இதை வற்புறுத்தி இந்த போலீஸ் வழக்கை வாபஸ் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

1979 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எல்லாப் பிரச்சினைகளையும் பேசி தீர்த்து விட முடியும் என்று நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ஆடு, மாடுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பெறுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, திருவாளர்கள், கூத்தகுடி சண்முகம், மெ. சிவசாமி, சேலம் மு. ஆறுமுகம், கே. பண்ணைசேதுராமன் ஆகியோர் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள். திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; தலைவர் அவர்களே, ''கடந்த சில மாதங்களாக தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான மாடுகள் கேரளாவிற்கும், ஆடுகள் ஆந்திராவிற்கும் அனுப்பப் படுவதால். தமிழ்நாட்டில் மாடுகளின் விலையும், ஆட்டு இறைச்சியின் விலையும் கூடுதலாயிருப்பது குறித்து.'' பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே!

1974 ஆம் ஆண்டு கால்நடை கணக்கின்படி தமிழ்நாட்டில் மொத்தம் 234 இலட்சம் கால்நடைகள் உள்ளன. இவற்றில் கால்நடை மற்றும் எருமைகள் 134.2 இலட்சம், செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகள் 93.4 இலட்சம்.

நமது மாநிலத்திலிருந்து கறவை மாடுகளும் இழுவை மாடுகளும் வெளி மாநிலங்களுக்கு, குறிப்பாக கேரள மாநிலத்திற்கு இறைச்சிக்காக பெரும் அளவில் கொண்டு செல்லப்படுவதாக முறையீடுகள் அரசுக்கு 1974 ஆம் ஆண்டில் வந்தன.

1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ் நாடு பால்வள நிறுவன நிர்வாக இயக்குநர், ஓராண்டு காலமாக நல்ல கறவை மாடுகளின் விலை ஏறிக்கொண்டு வருவதாகவும், நல்ல கலப்பின கறவை மாடுகள் நீலகிரியிலிருந்து, கேரளம், கர்நாடகம், மற்றும் ஏனைய மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவித்தார். ஆதலால் இம்மாநிலத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு கால் நடைகள் கொண்டு செல்லப்படுவதைக் கட்டுப்படுத்த சட்டமியற்ற வேண்டுமென கருத்துத் தெரிவித்தார்.